**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
Spl. S.C. No. 31/19

**நாள்: 01.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 12.00 மணி**

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு விசாரணை):**

**அ.சா - 1 சித்ரா (அரசு தரப்பில் மறுவிசாரணை ):**

நான் சம்பவ சமயத்தில் என் மகன் காணாமல் போன அன்று நான் பயன்படுத்திய என்னுடைய செல்போன் நம்பரை என்னால் சொல்ல முடியும். அந்த செல்போன் எண் 9629450321. என் மகன் கோகுல்ராஜ் வைத்திருந்த செல்போன் நம்பர் 7418809718 மற்றொரு எண் 9524753827. புகாரில் சுவாதியின் போன் நம்பரையும் சொல்லி இருக்கிறேன். அப்போது சுவாதி என்னோடு இருந்தார். சுவாதி 2 நம்பர்கள் கொடுத்தார். என்னிடம் காட்டப்பட்ட அதாசா 1 புகாரில் என்னுடைய செல்போன் நம்பர் முதல் பக்கத்தில் உள்ளது. கோகுல் ராஜ் போன் நம்பர் புகாரில் 2ஆம் பக்கத்தில் உள்ளது. சுவாதியின் செல்போன் நம்பர் புகாரின் 2வது பக்கத்தில் அந்த செல்போன் எண்கள் 9566949781 மற்றும் 8508012978. நான், என் மகன்கள் ,மற்றும் என் கணவர் ஆகியோர் பறையர் சாதியைச் சேர்ந்தவர்கள். சுவாதியை என்னால் பார்த்தால் அடையாளம் கூறமுடியும்.

(அரசுதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி நீதிமன்ற சான்றாஆவணம் 1 C.D Cam. 1 திறந்த நீதிமன்றத்தில் திரையிட்டு காட்டப்பட்டது.

இவ்வாறு 1 C.D Cam. 1 ஐ திரையிட்டு காட்டி சாட்சியிடம் விசாரணை செய்வதற்கு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆட்சேபணை செய்தனர்.)

1 C.D Cam. 1 திரையிட்ட போது அதில் 23.6.2015 ம் தேதி 10.52.53 நேரத்தில் திரையில் தோன்றிய கோவில் வாசலில் உள்ளே வரும் ஒரு வாலிபரையும், பெண்ணையும் சாட்சி தன்னுடைய மகன் கோகுல்ராஜ் என்றும் உடன் வரும் பெண் சுவாதி என்றும் அடையாளம் காட்டினார்.

1 C.D Cam. 5 திரையிட்ட போது அதில் 23.6.2015 தேதி 10.55.24 நேரம் முதல் திரையில் தோன்றிய கோவிலின் உட்பகுதியில் கம்பத்தின் அருகில் ஒரு வாலிபரும் , ஒரு பெண்ணும் வருபவர்களை சாட்சி தன்னுடைய மகன் கோகுல்ராஜ் என்றும் உடன் வரும்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

பெண் சுவாதி என்றும் அடையாளம் காட்டினார்.

அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் புகார் கொடுக்கும்போது வேறு யார் வந்தார் என்றும், சாட்சி அங்கு வந்ததாக சொன்ன இன்ஸ்பெக்டர் சக்கரபாணி என்ன செய்தார் என்றும், சாட்சியிடம் கேட்டார். மேற்படி கேள்விகள் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. நீதிமன்றம் சாட்சியை மறுவிசாரணை செய்ய தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ள காரணங்களுக்கு அப்பாற்பட்டு மேற்படி கேள்விகள் இருந்ததால் அந்த கேள்விகளை சாட்சியிடம் கேட்கவும், அவரின் பதிலை பதிவு செய்யவும் அனுமதி அளிக்கவில்லை.

**(அரசுதரப்பு வழக்கறிஞர் அசா 1 டம் தொடர்ந்து சில கேள்விகள் கேட்க அனுமதி வேண்டி மனுதாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னதால் சாட்சி விசாரணை நிறுத்ததப்பட்டது.)**

**விசாரணை நிறுத்தப்பட்ட நேரம் : 12.50 மணி**

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**Spl. S.C. No.** 31/19

நாள்: 01.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 2.35 மணி

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு விசாரணை):**

<u>அ.சா - 23 செல்வி (எ) செல்வரத்தினம் (அரசுதரப்பில் மறு விசாரணை:)</u>

ஏற்கனவே நான் நாமக்கல் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும் போது பொள்ளாச்சியை சேர்ந்த ரமேஷ் என்பவரின் டாட்டா சபாரி வாகனம் TN 41S 1564 வாகனத்தை யுவராஜிற்கு விற்பதற்கு ஏஜெண்டாக இருந்தேன் என்று சொல்லியுள்ளேன். தற்போது அந்த வாகனத்தை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். வண்டியின் பதிவு எண், என்ஜின் எண், சேசிஸ் எண் ஆகியவற்றை கொண்டு வண்டியை அடையாளம் காண்பேன்.

(அரசுதரப்பில் நீதிமன்ற வளாகத்தில் வாகனத்தை கொண்டு வந்து நிறுத்தி இருப்பதாகவும் சாட்சியை அங்கு சென்று வாகனத்தை பார்வையிட்டு அந்த வாகனம்தானா என்று அடையாளம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியை நீதிமன்ற அலுவலர் ஒருவருடன் வாகனத்தை பார்வையிட்டு வர அனுப்பி வைக்கப்பட்டார். சாட்சி திறந்த நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்ற அலுவலருடன் நீதிமன்ற வளாகத்தில் நிறுத்ததப்பட்டிருந்த வாகனத்தை பார்வையிட்டுவிட்டு வந்தார்.)

நான் ஏஜெண்டாக இருந்து விற்ற வாகனத்தைதான் நீதிமன்ற வளாகத்தில் சென்று பார்த்துவந்தேன். நீதிமன்ற சாபொ 42 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தற்போது நீதிமன்ற வளாகத்தில் வாகனத்தை பார்த்த பொழுது நம்பர் பிளேட் இல்லை. சேஸிஸ் எண், கண்ணாடி, பதிவு சான்றிதழ் அசாஆ 49 ஆகியவற்றை வைத்து வாகனத்தை அடையாளம் கண்டுபிடித்தேன். வாகனத்தின் நிறம் வெள்ளை ஆகும்.

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

<u>1 முதல் 15 எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் சொல்வதுபோல் நான் பார்த்த வாகனத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் போலீசார் சொல்லி கொடுத்தன் பேரிலும், அவர்களின் அழுத்தத்தின் பேரிலும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை நிறுத்தப்பட்ட நேரம் :  2.50 மணி**

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE** )
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**Spl**. **S**.**C**. **No**. 31/19

**நாள்: 01.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 2 .50 மணி**

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு விசாரணை):**

அ.சா - 24 ரமேஷ்குமார் (அரசுதரப்பில் மறு விசாரணை):

ஏற்கனவே நான் நாமக்கல் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும் போது என்னுடைய டாட்டா சபாரி வாகனம் TN 41S 1564 வாகனத்தை யுவராஜிற்கு விற்றேன் என்று சொல்லியுள்ளேன். தற்போது அந்த வாகனத்தை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். வண்டியின் பதிவு எண், என்ஜின் எண், சேசிஸ் எண் ஆகியவற்றை கொண்டு வண்டியை அடையாளம் காண்பேன்.

(அரசுதரப்பில் நீதிமன்ற வளாகத்தில் வாகனத்தை கொண்டு வந்து நிறுத்தி இருப்பதாகவும் சாட்சியை அங்கு சென்று வாகனத்தை பார்வையிட்டு அந்த வாகனம்தானா என்று அடையாளம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியை நீதிமன்ற அலுவலர் ஒருவருடன் வாகனத்தை பார்வையிட்டு வர அனுப்பி வைக்கப்பட்டார். சாட்சி திறந்த நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்ற அலுவலருடன் நீதிமன்ற வளாகத்தில் நிறுத்ததப்பட்டிருந்த வாகனத்தை பார்வையிட்டுவிட்டு வந்தார்.)

நான் விற்ற வாகனத்தைதான் நீதிமன்ற வளாகத்தில் சென்று பார்த்துவந்தேன். நீதிமன்ற சாபொ 42 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தற்போது நீதிமன்ற வளாகத்தில் வாகனத்தை பார்த்த பொழுது நம்பர் பிளேட் இல்லை. சேஸிஸ் எண், கண்ணாடி, பதிவு சான்றிதழ் அசாஆ 49 ஆகியவற்றை வைத்து வாகனத்தை அடையாளம் கண்டுபிடித்தேன். வாகனத்தின் நிறம் வெள்ளை ஆகும்.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

<u>1 முதல் 15 எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் சொல்வதுபோல் நான் பார்த்த வாகனத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் போலீசார் சொல்லி கொடுத்தன் பேரிலும், அவர்களின் அழுத்தத்தின் பேரிலும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை நிறுத்தப்பட்ட நேரம் :  2.55 மணி**

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE** )
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**Spl**. **S**.**C**. **No**. 31/19

நாள்: 01.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 1.10 மணி

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு குறுக்கு விசாரணை):**

<u>அ.சா - 30 பாலகிருஷ்ணன் (அரசுதரப்பில் மறு குறுக்கு விசாரணை) :</u>

நான் ஏற்கனவே நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கில் சாட்சி சொன்னேன். KSR பொறியியல் கல்லூரிக்கு எதிரில் தான் Vicky Stores என்ற என்னுடைய கடை உள்ளது. அதில் டீ கடை ஸ்டோர், பொதுதொலைபேசி கடை ஆகியவை உள்ளது. அங்கு வைத்துள்ள பொது தொலைபேசி எண் 04288 274266. இந்த பொது தொலைபேசி கடையை 20 ஆண்டுகளாக என் மனைவி சிவகாமி பேரில் வைத்து நடத்துகிறேன் என்றால் சரிதான். விக்கி ஸ்டோர்ஸ் என்பது விக்கி என்பது என் மகன் விக்னேஸ்வரன் குறிப்பது என்றால் சரிதான். அதாசா ஆ 57 கையெழுத்தை அதற்கு மேல் ஒட்டப்பட்டுள்ள சங்கரின் புகைபடத்தை 23.6.2015 தேதி 8.30 மணிக்கு என்னுடைய பொதுதொலைபேசி கடையில் பார்த்தேன் என்று அடையாளம் காட்டிதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> இல்லை.

**விசாரணை** நிறுத்தப்பட்ட நேரம் : 1.25 மணி

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com